உ

**STD : 04294 : Ph :250223, 292595**

"சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக"

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் - சென்னிமலை

பெருந்துறை வட்டம் - ஈரோடு மாவட்டம்.

****

## ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் செயல் அலுவலரால், அரசுத்துறையினில் பதிவு பெற்ற, உரிய தகுதியுடைய (மாநில அளவில்) ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்க்காணும் பணிக்கான மூடி முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| பணியின் விபரம் | பணியின் மதிப்பு (ரூபாய்) | செலுத்த வேண்டிய முன் வைப்புத்தொகை (EMD) ரூ. | டெண்டர் படிவ விலை விற்பனை வரி உள்பட ரூ. | பணியினை செய்து முடிக்க வேண்டிய கால அவகாசம் |
|---|---|---|---|---|
| 1. மலைக்கோயிலில் அன்னதான மண்டபம் கட்டுதல் | 43,34,000/- | 31,700/- | 9,450/- | 12 மாதம் |

### ஒப்பந்த வரையறைகள்

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 08.01.2018 முதல் 23.01.2018 மாலை 5.45 மணி வரை வழங்கப்படும். அலுவலக நாட்களில் காலை 9.45 முதல் மாலை 5.45 மணி வரை வழங்கப்படும்.

2. முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி. 24.01.2018-ம் நாள் பிற்பகல் 3.00 மணி வரை.

3. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 24.01.2018-ம் நாள் பிற்பகல் 3.30 மணியளவில் திறக்கப்படும்.

4. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் அலுவலகத்தில் உரிய தொகையினை ரொக்கமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

5. ஒப்பந்தப்புள்ளியுடன் செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத் தொகை கீழ்க்கண்ட பதவியின் பெயரில் பணவரைவோலையாக பெற்று ஒப்பந்தபுள்ளி ஆவணங்களுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

---

## Demand Draft should be drawn in favour of

| | |
|---|---|
| The Executive Officer,<br>Arulmigu Subramaniyaswamy Temple.<br>Chennimalai. | செயல் அலுவலர்<br>அருள்மிகு.சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்<br>சென்னிமலை. |

---

6. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் துறை அலுவலர்கள் முன்னிலையில் 24.01.2018 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு திருக்கோயில் செயல் அலுவலரால் ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்பாக திறக்கப்படும்..

7. ஒப்பந்ததாரர்கள் பணியினைச் செய்ய வேண்டியுள்ள பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஒப்பந்தப்புள்ளி இடம் பெற்றுள்ள இனங்களின் தன்மைகளை ஆய்ந்து அதற்கேற்ப ஒப்பந்தபுள்ளி கொடுக்க வேண்டும்.

8. ஒப்பந்ததாரர்கள் இப்பணியில் இடம் பெறும் ஆகம சிற்ப சாஸ்திர ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய இனங்களை, அரசு அங்கீகாரம் பெற்ற ஸ்தபதி ஒருவரை தனது பொறுப்பில் நியமித்து அவரது மேற்பார்வையில் செய்து முடிக்க வேண்டும்.

9. ஒப்பந்ததாரர்கள் இப்பணியினை தனது சொந்தப் பொறுப்பில் தொழில்நுட்ப உதவியாளர் (Technical Assistant) ஒருவரை நியமனம் செய்து அவரது மேற்பார்வையில் பணியின் தரத்தினை உறுதி செய்து முடித்தல் வேண்டும். தவறின் விதிகளின்படி தண்டத்தொகை நிர்ணயம் செய்து பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

10. எந்தஒரு ஒப்பந்தப்புள்ளியை காரணம் கூறாமல் நிராகரிக்க திருக்கோயில் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

11. அரசுத்துறையினில் குறிப்பிட்டுள்ள மதிப்பிற்கான பணிகளை செய்து தர, பதிவு பெற்றுள்ள தகுதியுடைய ஒப்பந்ததாரர் என்பதற்கான, ஒப்பந்தக்காரர் பதிவு உத்திரவு நகல் இணைக்கப்படல் வேண்டும். டெண்டர் தேதியில் பதிவு உரிமம் புதுப்பிக்கப்பட்டுள்ளமைக்கான சான்றும் இணைக்கப்படல் வேண்டும்.

12. ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரர் தாம் ஒவ்வொரு இனத்திற்கு கோரும் விலைப்புள்ளியினை எண்ணாலும், எழுத்தாலும் குறிப்பிடுதல் வேண்டும்.

13. ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிடப்படும் விலைப்புள்ளிகளில் அடித்தல், திருத்தல் செய்தல் கூடாது. அவ்வாறு நேரிடும் இனங்களில் ஒப்பந்ததாரரால் அவை அத்தாட்சி செய்யப்படல் வேண்டும்.

14. ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் தொடர்பான நிகழ்வுகள் துறையின் ஆணையரின் முடிவே இறுதியானது ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் டெண்டர் திறப்பு நடைபெற்ற தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் இறுதியாக்கப்படும்.

15. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிப்பது தொடர்பான முடிவு இறுதியாக்கப்பட்டவுடன் ஒப்பந்ததாரருக்கு திருக்கோயிலிலிருந்து பணி உத்திரவு (Work order) வழங்கப்படும்.

16. பணி உத்திரவு வழங்கப்பட்டவுடன், நிர்ணயிக்கப்படும் கூடுதல் பிணை வைப்புத் தொகையினை திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி 10 தினங்களில் உரிய ஒப்பந்தப்பத்திரம் ஒப்பந்ததாரர் செயலாக்கித் தரப்பட வேண்டும்.

17. ஒப்பந்தப்பத்திரம் செயலாக்கப்பட்ட 15 தினங்களுக்குள் பணியிடம் (Site) ஒப்பந்ததாரர் வசம் ஒப்படைக்கப்படும் பணியினை உரிய காலத்திற்குள் செய்து முடித்து பணியிடம் திரும்ப திருக்கோயில் வசம் ஒப்பந்ததாரர்களால் செயலாக்கித் தரப்பட வேண்டும்.

18. பணி நடைபெறும் போது துறை பொறியாளர்களால் பார்வையிட்டு அவ்வப்போது தயாரிக்கப்படும் பட்டியலின்படியே தொகை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படும்.

19. பணிக்கு எக்காரணம் கொண்டும் முன்பணம் கொடுக்கப்படமாட்டாது.

20. பொறியாளர்களால் தயாரிக்கப்படும் பணிக்கான பட்டியலில் 5% தொகை காப்புத் தொகையாக பிடித்தம் செய்து வைக்கப்படும். இத்தொகை இப்பணிக்கான இறுதிப்பட்டியலில் விடுவித்து வழங்கப்படும்.

21. பொறியாளர்களால் தயாரிக்கப்படும் பணிக்கான பட்டியலில் வருமான வரி 2% அதற்கான சர்சார்ஜ் 15% மற்றும் விற்பனை வரி 2% ஆகியவை பிடித்தம் செய்யப்பட்டு உரிய தலைப்புகளில் செலுத்தப்படும். ஒப்பந்ததாரரால் வருமான வரித்துறையில் நிலையான வரி விதிப்பு எண் (Pan No.) பெறப்பட்டிருப்பின் அவ்விபரம் திருக்கோயிலுக்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.

22. ஒப்பந்ததாரரால் செலுத்தப்படும் முன்வைப்புத் தொகை மற்றும் கூடுதல் பிணை வைப்புத் தொகை (ASD) பணிக்கான தணிக்கை அறிக்கை முடிவுற்ற பிறகு / முடிவு அறிக்கை அங்கீகாரம் பெற்ற பிறகு வழங்கப்படும்.

23. ஒப்பந்ததாரரால் செலுத்தப்படும் காப்புத் தொகைகளுக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

24. ஒப்பந்தப்புள்ளி கூட்டு பொறுப்பு / நிறுவனம் சார்பில் கொடுக்கப்படின் அதன் பதிவு விபரம், ஒப்பந்த நமூனாக்களில் கையொப்பம் இட அங்கீகாரம் பெற்றவர் குறித்த அத்தாட்சிகள் இணைக்கப்படல் வேண்டும்.

25. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி பணியினை குறித்த காலத்திற்குள் முடிக்கப்பெறாவிடில், அதற்கான தண்டத் தொகையினை நிர்ணயம் செய்யும் அதிகாரம் செயல் அலுவலருக்கு உரியதாகும்.

26. இப்பணிக்கு தேவைப்படும் மின்சாரம், தண்ணீர் ஆகியவற்றிற்கு ஒப்பந்ததாரர் தனது சொந்தப் பொறுப்பில் உரிய ஏற்பாடுகளை செய்து கொள்ளல் வேண்டும்.

27. எதிர்பாராத அசம்பாவிதங்கள் ஏற்படின் அதனால் ஏற்படும் சகல இழப்புகளுக்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

28. பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களின் பாதுகாப்பிற்கு ஒப்பந்ததாரரே முழுப் பொறுப்பாகும். பணியாளருக்கான காப்பீடு செய்திருத்தல் அவசியம் ஆகும்.

29. ஒப்பந்ததாரர் பணியினை இடையில் நிறுத்தி தொடராதிருப்பின் அவ்வினங்களை செயலாக்க திருக்கோயில் நிர்வாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதனால் ஏற்படும் செலவினங்கள் மற்றும் இழப்புகளுக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாகிறார்.

30. பணியின் செயலாக்கம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் சட்ட விதிகளின்படி செயலாக்க திருக்கோயில் நிர்வாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதனால் ஏற்படும் செலவினங்கள் மற்றும் இழப்புகளுக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாகிறார்.

31. ஒப்பந்ததாரரின் T.N.G.S.T.Reg.Number, Area Code, Name of the Assessment, Circle TIN No. ஆகிய விபரங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்தல் வேண்டும்.

32. மேற்படி ஒப்பந்த புள்ளி படிவங்களை கீழ்க்காணும் திருக்கோயில் வலைதளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

33. இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சென்னிமலை : www.chennimalaitemple.tnhrce.in**
**: www.tenders.tnhrce.org**

**திரு.எம்.அருள்குமார், எம்.ஏ.,**
**செயல் அலுவலர்**
**செல். 9443944640**

**திரு. ப.முருகையா, எம்.ஏ.,பி.எல்.,**
**தக்கார் /உதவி ஆணையர்**
Email : chennkovil@gmail.com
Website : chennimalaitemple.tnhrce.in

**இடம் : சென்னிமலை**
**நாள் : 04.01.2018**